# சவூதி அரேபியாவுக்கு அமெரிக்க ஏவுகணைகள்!

## வளைகுடாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாம்

வாஷிங்டன் மே. 30

சவூதி அரேபியாவுக்கு சிறிய ஏவுகணைகளை அனுப்பியுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

வளைகுடா நாடுகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாலேயே இந்த ஏவுகணைகளை அனுப்பியுள்ளதாக அமெரிக்க அதிபர் றீகன் தெரிவித்துள்ளார்.

ஈரான் — ஈராக் யுத்தத்தை நிறுத்துமாறு யோசனை தெரிவித்துவந்த வளைகுடா நாடுகளின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் சவூதி அரேபியாவின் கோரிக்கைக் கிணங்கவே ஏவுகணைகள் அனுப்பப்பட்டிருந்ததாக அமெரிக்க அதிபர் தெரிவித்தார்.

சவூதி அரேபியாவில் அமெரிக்க ஏவுகணைகள் குவிக்கப்படுவதாக ஏற்கனவே சோவியத்யூனியன் குற்றஞ்சாட்டி வந்துள்ளபோதிலும் அமெரிக்கா முதல்தடவையாக இதனை ஒப்புக்கொண்டுள்ளது. ஹோர்மூஸ் நீரிணைப்பகுதியை மூடிவிடப் போவதாக ஈரான் அறிவித்துள்ளதை அமெரிக்காவோ அல்லது வேறுநாடுகளோ அனுமதிக்காது என்றும் றீகன் தெரிவித்தார்.

ஈரான் — ஈராக் போரில் அமெரிக்கா ஒருபோதும் தலையிடாது என்றும் அவர் தெரிவித்தார்.




## மட்டக்களப்பில் இளைஞர்கள் விசாரணை

(இரா உதயகுமார்)

மட்டக்களப்பில் பத்திரிகை நிருபர் ஒருவர் உட்பட பல இளைஞர்களைப் பாதுகாப்புப் படையினர் விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர்.

வவுணதீவு கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு பெரியகல்லாறு ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே இவ் இளைஞர்கள்.

## ஈரான்-ஈராக் எல்லையில் சர்வதேசத் துருப்புக்கள்!

### ஐ. நா.விடம் அரபுநாடுகள் கோரிக்கை

நியூயோர்க் மே, 30

ஈரான் — ஈராக் எல்லையில் பல்வேறு நாடுகளினதும் துருப்புக்களை நிறுத்தவேண்டும் என்று இஸ்லாமிய மாநாட்டுத் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யுத்தநிறுத்தமொன்றை ஏற்படுத்தஐ. நா. பாதுகாப்புச்சபை மீண்டும் நேற்றுக்கூடியபோதே இஸ்லாமிய மாநாட்டு நாடுகளின் பிரதிநிதிகள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இந்தக்கூட்டத்தில் பேசிய சகல பிரதிநிதிகளும் யுத்தத்தை நிறுத்த தீவிர முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஈரான் — ஈராக் எல்லையில் பல்வேறு நாடுகளினதும் துருப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று அரபு நாடுகளின் தலைவர்கள் தனித்தனியே கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை ஈரானின் இறங்குதுறை ஒன்றின்மீது ஈராக் நடத்திய தாக்குதலில் இராணுவ நிலையம் ஒன்றும் இரண்டு கண்காணிப்பு நிலையமும் சேதப்படுத்தப்பட்டதாக பாக்தாத்தில் நேற்று வெளியான செய்திகள் தெரிவித்தன.

## எகிப்தில் ஆளுங்கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை

### 448 இடங்களில் 391ஐ பெற்றது

கெய்ரோ மே 30

எகிப்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆளும் கட்சியான தேசிய ஜனநாயகக் கட்சி அறுதிப் பெரும்பான்மை பலத்தைப் பெற்றுள்ளது.

மொத்தம் 448 இடங்களைக் கொண்ட எகிப்திய பாராளுமன்றத்தில் 391 ஆசனங்களை ஆளும்கட்சி பெற்றுள்ளது.

எகிப்திய அதிபர் திரு முபாரக்கின் இக்கட்சி மொத்த வாக்குகளில் 87 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளது.

அதிபர் முபாரக்கின் பிரதான முக்கிய எதிர்க் கட்சியாக விளங்கிவந்த மூன்று பிரதான கட்சிகள் இத்தேர்தலில் படுதோல்வி அடைந்துள்ள அதேவேளையில் 'வப்' என்றழைக்கப்படும் கட்சி 57 இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

வபது கட்சி மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## பயங்கரவாதத்தை முறியடிக்க இலங்கை-கொரியா ஆதரவு

### இருநாட்டு ஜனாதிபதிகளும் உறுதி

சோல் மே 30

சர்வதேச பயங்கரவாதத்தை முறியடிக்கவும் கட்டுப்படுத்தவும் எல்லா நடவடிக்கைகளுக்கும் கூட்டாக ஆதரவளிக்க இலங்கையும் தென் கொரியாவும் முன்வந்துள்ளன.

தென்கொரியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா, தென் கொரிய ஜனாதிபதி திரு சுன்-டூ. ஹுவானைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இருநாடுகளுக்கிடையே பொருளாதார கலாசார ஒத்துழைப்பின் அவசியம் வலியுறுத்தப்பட்டது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் முதலீடுகளை ஆரம்பிப்பது தொடர்பாக ஆராய்வதற்காக தென்கொரிய அமைச்சர்கள் மட்டத்திலான பொருளாதார நிபுணர்குழு ஒன்று விரைவில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். விழிப்புணர்வோர் சங்கத்தின் எட்டாவது ஆண்டு நிறைவுப் பொதுக்கூட்டம் யாழ். நவீன சந்தை மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை திரு ஏ. விஜயராஜசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு சி. குணநாயகம் கலந்து கொள்வுள்ளார்.

விழிப்புணர்வோர் ஒன்றுகூடல், சிறப்பு விருந்தினர் உரை, பிரதம அதிதி உரை, விழிப்புணர்வோர் உறுப்பினர்கள் திட்டத்தை அறிமுகப்படுத்தல் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

யாழ். பொது நூலக

## திறப்பு விழாவில் கலந்துகொள்ள இந்தியத் தூதுவருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் திறப்பு விழாவின் போது தமிழ்நாட்டிலிருந்து நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள நூல்களையும் கொண்டுவந்து வழங்குமாறு யாழ் மாநகரசபை ஆணையாளர் இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகரைக் கேட்டுள்ளார்.

யாழ். பொது நூலகம் 1981-ம் ஆண்டு எரிக்கப்பட்டதையடுத்து தமிழ் நாட்டில் சுமார் பத்து லட்சம் ரூபாய் பெறுமதியான நூல்கள் சேகரிக்கப்பட்டு அன்பளிப்புச் செய்யப்பட்டன. இந்நூல்கள் இப்பொழுது கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. யாழ். பொது நூலகம் ஜூன் மாதம் 4-ம் திகதி திறக்கப்படும் போது அதில் வந்து கலந்து கொண்டு சிறப்பிக்கும்படியும், அவ்வமயம் தமிழ் நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட நூல்களைக் கையளிக்கும்படியும் உயர் ஸ்தானிகர் திரு சதிவாலிடம் ஆணையாளர் திரு சிவஞானம் கோரியிருக்கிறார்.

இதுபற்றி தமிழ்நாடு முதல்வர் திரு. எம் ஜி ராமச்சந்திரனுக்கும் ஆணையாளர் கடிதம் எழுதியுள்ளார்.

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 5-30 | பிக் புளூமாபிக் (ஆங்கிலம்) |
| 6-00 | 'ஹிஸ் லெப்பூமர்' (ஆங்கிலம்) |
| 6-35 | சிங்கள நிகழ்ச்சி |
| 7-15 | ஹிந்தி பாடல்கள் |
| 7-45 | சதிர்வாவ நிகழ்ச்சிகள் |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | நாடகம் (சிங்களம்) |
| 9-05 | "விண்ட்ஸ் ஒவ் வோர்" (ஆங்கிலம்) |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | "விண்ட்ஸ் ஒவ் வோர்" தொடர்ச்சி |
| 10-30 | உலகச் செய்தித் தலைப்புகள் |
| 10 35 | நிகழ்ச்சிகள் முடிவு. |

## ஆயுதப்படையினர் தீவிர தேடுதல்!

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டம் முழுவதும் ஆயுதப்படையினர் தீவிரதேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்


சில இடங்களில் நடாத்தப்பட்ட சோதனைகளின்போது, சந்தேகத்தின் பேரில் பலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

முக்கிய சந்திகளிலும் ஆயுதப்படையினர் நின்று பிரயாணிகள், வாகனங்களை சோதனையிடுவதாகவும் அடையாள அட்டையுள்ளவர்கள் சோதனையின் பின்னர் விடுவிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

காங்கேசன்துறைத் தொகுதியில் உள்ள இரு வீடுகளில் இருந்து டைனமைட்டுகள் போன்றவற்றை ஆயுதப்படையினர் கண்டு பிடித்து கைப்பற்றியதாகவும், வீட்டுக்காரரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது

அச்சுவேலி, கொக்குவில் போன்ற இடங்களில் நேற்று சில இளைஞர்கள் ஆயுதப்படையினரால் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.


# பொன்ட்ஸ் ட்றீம்ஃப்ளவர் டால்க்




## இப்போது புதிய கலத்தில் கிடைக்கும்

அந்த விசேஷ ட்றீம்ஃப்ளவர் மலர் மணம் ஞாபகம் இருக்கிறதா?
இப்போது அதி கவர்ச்சியான ஒரு புதிய கொள்கலத்தில்
அது மீண்டும் கிடைக்கும். என்றும் போல் அதே மென்மை, அதே
இதம், அதே நுண்மை வாய்ந்தது. பொன்ட்ஸ் ட்றீம்ஃப்ளவர் டால்க்.
வாழ்க்கையின் சொகுசுகள் போன்ற தன் வாசனையை அது என்றும்
இழப்பதில்லை

விலை 100 கி. ரூ 15-00 250 கி ரூ. 25-00

**என்றும் நீங்கள் விரும்பி ஏற்ற மனம் கவர் நறுமணம்.**

POND'S

HTL IC 1104

இன்ரநாஷனல் கொஸ்மெற்றிக்ஸ் லிமிட்டெட், பொன்ட்ஸ்—மகாராஜா என்டர்பிரைஸஸ்.


## இன்றைய பலன்

மாதம்—வைகாசி
திகதி—18 (31-5-1984)
வாரம்—வியாழன்

திதி—பிரதமை இரவு 10-16 வரை

நட்சத்திரம்—ரோகிணி பிற்பகல் 12-27க்கு மேல் மிருகசீரிடம்

**மேடம்:** இனம்பூசலின்மூலம் இதயபாரம் ஏற்படும் நிலை முடிவுக்கு வருமாறு நிர்ப்பந்திக்கப்படுவீர்கள் எதையும் தாங்கும் இதயத்துடன் செயலாற்றின் நிலைமை சமாளிக்க முடியும்.

**இடபம்:** குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும் உறவினர் ஒருவரின் வருகை உற்சாகத்தை அளிக்கும் எதையும் அலசி ஆராய விரும்புவீர்கள் அடக்கிவேண்டும்.

**மிதுனம்:** உணர்ச்சிமயமான தினம் மனப்போராட்டங்கள் நடைபெறும் உடல் நலனும் பாதிக்கப்படலாம் குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரக்தி மனப்பான்மையை உருவாக்கும்.

**கடகம்:** ஒலிபரப்புக் வாழ்க்கை உறவினர்கள் மத்தியில் ஒற்றுமை மலரும் எதிர்பார்த்ததைவிட அதிகம் கிடைக்கலாம் பொன்னான தினம்.

**சிம்மம்:** தன்மான வாழ்வுடன் தனமும் சேரும் நீண்ட நாள் கனவு இன்று நனவாகும் கொள்கையில் அதிக பற்றுதல் ஏற்படும் இனசனக் கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு பிள்ளைகளின் செல்வாக்குப் பெருகும்.

**கன்னி:** பணம் பலவழிகளிலும் செலவாகும் அன்னிய நபரொருவரால் ஏமாற்றம் உண்டாகக்கூடும் உமது நடவடிக்கைகளை எதிரிகள் வேவு பார்ப்பர் பிரயாணத்தின் போது பொருள் நழுவக்கூடும் நிதானம் வேண்டும்.

**துலாம்:** புதிய நண்பர்களுடன் பழகுவீர்கள் இன்று ஏற்படும் தொடர்புகள் எதிர்காலத்தில் நல்ல பலனை அளிக்கும் வியாபாரவழியாலும் நன்மைகள் சேருவதற்கு இடமுண்டு வரவேற்க வேண்டிய தினம்.

**விருச்சிகம்:** பேச்சுவார்த்தைகளில் உணர்ச்சிவசப்படாதிருப்பது நன்று அவசரப்புத்தியின் மூலம் ஆபத்தைத் தேடிக்கொள்வீர்கள் நண்பர்கொண்டவர் துரோகத்தை செய்வர்.

**தனுசு:** பிரயாணவழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திகிடைக்கும் முன்பு தெய்வ நம்பிக்கையில் அதிக ஆர்வம் ஏற்படும் புண்ணிய காரியங்களில் மனம் நாடும் நீண்டநாள் கவலைகள் இன்று நிவர்த்தியாகும்.

**மகரம்:** வெற்றிப்பாதையில் வீறு நடை போடுவீர்கள் தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும் எதிர்காலத்தில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும் சுபதினம்.

(7-ம் பக்கம் பார்க்க)

